## அதானி நடத்தும் துறைமுகம் வாயிலாகத்தான் போதைப் பொருள்கள் இந்தியா முழுவதும் ஊடுருவல்!

# கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்தான் போதைப் பொருள்கள் தலைவிரித்தாடின!

## ‘தினமலர்’ இதழுக்கு - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிறப்புப் பேட்டி!

**சென்னை, ஏப்.5-**

**அதானி நடத்தும் துறைமுகம் வாயிலாகத்தான் இந்தியா முழுவதும் போதைப் பொருட்கள் ஊடுருவுகின்றன. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தான் போதைப் பொருள் தலைவிரித்தாடியது என்று ‘தினமலர்’ இதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி குறிப்பிட்டார்.**

**தி.மு.க., அமைப்புச் செயலாளரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான ஆர்.எஸ்.பாரதி, ‘தினமலர்’ நாளிதழுக்கு அளித்த சிறப்புப் பேட்டி வருமாறு:**

**கேள்வி:** *முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சியில், ஐந்தாண்டுகள் அங்கம் வகித்து, தமிழகத்தில் பா.ஜ., வை வேரூன்ற வைத்தது தி.மு.க.,தான் என, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறுகிறாரே...*

**பதில்:** சீமான், தமிழக அரசியலை முழுமையாக அறிந்து பேச வேண்டும். வாஜ்பாய் ஆட்சியை தி.மு.க., ஆதரித்தது உண்மைதான். ஆனால், அப்போதைய பா.ஜ., அரசு, ஆர்.எஸ்.எஸ்., அஜண்டாவை நிறைவேற்றாமல் தி.மு.க. தான் பார்த்துக் கொண்டது என்பது, சீமானுக்கு ஏன் தெரியவில்லை.

ராமர் கோவில் பிரச்சினை, குடியுரிமை சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம், பொது சிவில் சட்டம் போன்ற விவகாரங்களில், பா.ஜ., அரசின் ஒருதலை பட்சமான முடிவுகளை தி.மு.க., நிறைவேற்ற விடவில்லை. குஜராத் மாநிலத்தில் நடந்த கோத்ரா ரயில் எரிப்பு

சம்பவத்தில், அப்போது குஜராத் முதல்வராக இருந்த மோடியை கைது செய்ய வேண்டும். அவரது ஆட்சியை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என பிரதமர் வாஜ்பாயிடம் வலியுறுத்தியவர் கலைஞர்.

குறைந்தபட்ச செயல் திட்டம் வகுத்து தான் ஆதரவு அளித்தோம். நாட்டு நலன் கருதி எடுக்க வேண்டிய உத்தரவிட்டு செயல்படுத்திய கலைஞர் என்பதை, சீமானுக்கு ஞாபகப்படுத்துகிறேன்

அ.தி.மு.க வேட்பாளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதை அனுமதி பெற்று வெளியிடும் பழனிசாமியைப் போல் கொத்தடிமையாக இருந்ததில்லை. மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி கொள்கையோடுதான் தி.மு.க .செயல்படும்.

### தொலைநோக்குப் பார்வையுடன் நலத்திட்ட அறிவிப்புகள்!

**கேள்வி:** *பூரண மதுவிலக்கு இடம்பெறாதது ஏன்?*

**பதில்:** மக்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான, அவர்களின் எதிர்காலம் நலம் பெற, தொலைநோக்குப் பார்வையுடன் பல்வேறு நலத்திட்ட அறிவிப்புகளை வெளியிட்டுள்ளோம். அதே சமயம் எது சாத்தியப்படுமோ, எதை நிறைவேற்றித் தர முடியுமோ, அதை மட்டும் தான் தேர்தல் அறிக்கையில் இடம்பெறச் செய்துள்ளோம். பூரண மதுவிலக்கு சாத்தியமில்லை என்பது அனைவருக்கும் தெரியும். அது எல்லாரும் ஏற்றுக்கொண்ட ஒன்று.

**கேள்வி:** *தி.மு.க. வேட்பாளர் பட்டியலில் உங்கள் பெயரோ, உங்கள் மகன் பெயரோ ஏன் இடம் பெறவில்லை?*

நானும் என் மகனும் சட்டசபைத் தேர்தலில் போட்டியிட சீட் கேட்கவில்லை. தி.மு.க.,வில், 63 ஆண்டுகளாக நான் இருக்கிறேன். கட்சியில் நான் எந்த பதவியும் கேட்டுப் பெற வேண்டிய அவசியமில்லை. எனக்கு கிடைத்த பதவிகள் எல்லாம், கலைஞரும் மு.க.ஸ்டாலினும் வழங்கியது தான்.

**கேள்வி:** *சென்னையில் பிரச்சாரத்தை துவக்கிய த.வெ.க., தலைவர் விஜய்க்கு கூடிய கட்டுங்கடங்காத கூட்டத்தால், பிரச்சாரத்தை பாதியில் முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இது, தி.மு.க.,வுக்கு கிலியை ஏற்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறதே...*

### மேகக் கூட்டம் கலைந்து போகும்!

**பதில்:** சினிமா நடிகர்களுக்கு கூடும் கூட்டத்தை, பல ஆண்டுகளாக பார்த்து பழக்கப்பட்டவர்கள் நாங்கள். அந்த கூட்டமெல்லாம், மேகங்கள் கூடி கலைவதை போல கலைந்து போகும் கூட்டம். இதற்கு மேல் நான் விமர்சனம் செய்ய விரும்பவில்லை.

**கேள்வி:** *ஆட்சியில் பங்கு கேட்டு, காங்கிரஸ் நீண்ட நெடிய போராட்டத்தை நடத்தியபோது, ‘கார்கே,*



*ராகுல் போன்றோர் கேட்கவில்லை; முதலில் அவர்கள் கேட்கட்டும்’ என கூறினீர்கள். அவர்கள் கேட்டிருந்தால், ஆட்சியில் பங்கு உடன்பாடு ஏற்பட்டிருக்குமா?*

**பதில் :** அவர்கள் கேட்டிருந்தாலும், இவர்களிடம் சொன்ன பதிலைதான், அவர்களிடமும் சொல்லியிருப்போம்.

### கூட்டணி ஆட்சியை மக்கள் விரும்பமாட்டார்கள்!

**கேள்வி:** *கூட்டணி கட்சி ஓட்டுகளை பெற்றுக் கொண்டு, அவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்களிக்க மறுப்பது சரியா?*

**பதில் :** எங்கள் கட்சியின் நிறுவனத் தலைவரான அண்ணா காலத்தில் இருந்து, க.லைஞர் ஸ்டாலின் ஆட்சி வரை, அதே நிலை தான் நீடிக்கிறது. கடந்த 2006ம் ஆண்டு சட்டசபை தேர்தல் முடிவில், தி.மு.க., வுக்கு 96 இடங்கள் கிடைத்தன. பா.ம.க., மற்றும் காங்கிரஸ் ஆதரவுடன் கரு கலைஞர் தலைமையில், ஐந்தாண்டு கால ஆட்சி சிறப்பாக நடந்தது. பா.ம.க.,வும் காங்கிரசும் ஆட்சியில் பங்கு கேட்கவில்லை. தமிழகத்தில் கூட்டணி ஆட்சியை மக்களும் விரும்பமாட்டார்கள். அதை பல தேர்தல்களில் மக்கள் நிரூபித்துள்ளனர்.

**கேள்வி:** *பிரதமர் மோடி, அ.தி.மு.க., கூட்டணியை ஆதரித்து, நான்கைந்து முறை தேர்தல் பிரச்சாரத்திற்காக, தமிழகம் வந்து விட்டார். ராகுல், அடிக்கடி கேரளா சென்று பிரச்சாரம் செய்கிறார். தமிழகம் வரவில்லை. முதல்வர் ஸ்டாலின் மீது அதிருப்தியில் இருக்கிறார் என காங்கிரசார் கூறுகின்றனரே...*

**பதில்:** காங்கிரஸ் வேட்பாளர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. பிறகு எப்படி ராகுல் வருவார்; பட்டியல் வெளியான பின் ராகுல் வருவார். ஒரே மேடையில் முதல்வர் ஸ்டாலினும், ராகுலும் பிரச்சாரம் செய்ய வாய்ப்பு இருக்கிறது.

**கேள்வி:** *ராமதாஸ், சசிகலா ஆகிய இருவரும் கூட்டணி அமைத்து போட்டியிடுவதால், பா.ம.க., அ.தி.மு.க., வெற்றியை பாதிக்கும்; தி.மு.க., கூட்டணிக்கு வலிமை சேர்க்கும். அதனால்தான் தி.மு.க., பின்னணியில், அவர்கள் கூட்டணி அமைந்துள்ளதாக கூறப்படுவது பற்றி...*

**பதில்:** எங்கள் கூட்டணி வலிமையாக இருக்கிறது. பழனிசாமியும், சசிகலாவும் எதிரும் புதிருமாக செயல்படுகின்றனர். எதிர்ப்பவர்களின் இடையே தான் சண்டை நடக்கிறது. அதற்கு குறுக்கே நாங்கள் இருக்க விரும்பவில்லை.

**கேள்வி:** *காட்டுமன்னார் கோவில் தொகுதியில், வி.சி.க., தலைவர் திருமாவளவன் போட்டியிடுகிறார். அவர் வெற்றி பெற்றால், எம்.பி., பதவிக்கு இடைத் தேர்தல் நடக்கும். அத்தொகுதியை வி.சி.க.வுக்கு தருவீர்களா அல்லது தி.மு.க., போட்டியிடுமா?*

**பதில்:** அப்போதைய அரசியல் சூழலுக்கு ஏற்ப முடிவு செய்யப்படும்.

### 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம்!

**கேள்வி:** *உங்கள் கூட்டணியில் இடம்பெற்றுள்ள திருமாவளவன், தொங்கு சட்டசபை ஏற்படும் என்கிறார். புதிய தமிழகம் கிருஷ்ணசாமியும், யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்கிறார். இது நடக்க வாய்ப்பு இருக்கிறதா?*

**பதில்:** தி.மு.க., 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெற்று, உறுதியாக ஆட்சி அமைக்கும். தமிழகத்தில் இதுவரை தொங்கு சட்டசபை ஏற்படவில்லை; இனியும் வராது.

**கேள்வி :** *விஜய் பின்னால் இளைஞர்கள் செல்வதை தடுப்பதற்காகவும், அவர்கள் சிந்தித்து செயல்படாமல் இருக்க, கஞ்சா போதை மயக்கத்தில் வைக்க, இந்த ஆட்சியில், ‘கஞ்சா லாபி’ பரவலாக்கப்பட்டதாக த.வெ.க.வினர் குற்றஞ்சாட்டுகின்றனரே..*

### குட்கா விற்பனையில் லஞ்சம் பெற்ற அ.தி.மு.க.வினர்!

**பதில்:** அ.தி.மு.க.வின் பத்தாண்டுக் கால ஆட்சியில் குறிப்பாக, பழனிசாமியின் தலைமையிலான ஆட்சியில் தான் போதைப்பொருள் தலைவிரித்து ஆடியது. அதானி நடத்தும் துறைமுகம் வாயிலாக தான் இந்தியா முழுதும் போதைப் பொருட்கள் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன.

குட்கா விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் உட்பட போலீஸ் அதிகாரிகளை, சி.பி.ஐ., கைது செய்தது. நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன. இது எல்லாம் நடந்தது பழனிசாமி ஆட்சியில், அவரது தலைமையில் செயல்பட்ட காவல் துறை அதிகாரிகளான டி.ஜி.பி., கமிஷனர் போன்ற உயரதிகாரிகள், குட்கா விற்பனை விவகாரத்தில் சிக்கினர். குறிப்பாக, குட்கா விற்பனையில் இவ்வளவு லஞ்சம் என்றால், போதைப் பொருட்களுக்கு எவ்வளவு லஞ்சம் வாங்கினர் என்பது அவர்களுக்கே வெளிச்சம்.

ஒரு நீதிக்கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது. ‘அரண்மனையில் அரசன் சாப்பிட்ட பழத்தின் தோலை, தெனாலிராமன் சாப்பிட்டதற்கு சவுக்கடி தரப்பட்டது. தோலை சாப்பிட்ட எனக்கு இந்த வலி வலித்தால், பழம் சாப்பிட்ட அரசருக்கு எப்படி வலிக்கும்’னு சொன்ன கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது.

**கேள்வி:** *சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், நீக்கப்பட்ட வாக்காளர்களால், எங்கள் கூட்டணிக்கு பின்னடைவு ஏற்படும் என்கிறீர்கள். திருத்தம் முடிந்த பின் அமைதியானது ஏன்?*

**பதில்:** வாக்காளர்கள் 65 லட்சம் பேர் நீக்கப்பட்டதும், தி.மு.க., தனிக்கவனம் செலுத்தியது. சிறப்பு வாக்காளர்கள் திருத்தம் அறிவிக்கப்பட்டதும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் நேரடியாக கண்காணித்து, வாக்காளர்கள் உரிமை பறிபோவதை சட்ட ரீதியாக தடுத்து விட்டார். அவரது முயற்சியால்தான், வாக்காளர்களின் ஓட்டுரிமை பாதுகாக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு ‘தினமலர்’ நாளிதழுக்கு ஆர்.எஸ்.பாரதி பேட்டி அளித்துள்ளார்.

---

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர்

## கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர் தேர்தல் சுற்றுப் பயணம்!



| | |
|---|---|
| ஏப்ரல் 5 மாலை | ராமநாதபுரம் |
| ஏப்ரல் 6 | திருச்செந்தூர், தூத்துக்குடி |
| ஏப்ரல் 7காலை | பாளையங்கோட்டை , மாலை தென்காசி |
| ஏப்ரல் 8 காலை | வாசுதேவநல்லூர் |
| ஏப்ரல் 8மாலை | கடையநல்லூர், உலமாக்கள்உமராக்கள் கூட்டம் |
| ஏப்ரல் 8 இரவு | கடையநல்லூர் பிரச்சாரம் |
| ஏப்ரல் 9 | பாபநாசம் |
| ஏப்ரல் 10, | கடலூர், சிதம்பரம், காட்டுமன்னார் கோயில், பண்ருட்டி |
| ஏப்ரல்11 காலை | திருவண்ணாமலை, மாலை வாணியம்பாடி |
| ஏப்ரல் 12 | வாணியம்பாடி |
| ஏப்ரல் 13 | சென்னை |
| ஏப்ரல் 14 | சென்னை ராயபுரம் |
| ஏப்ரல் 15,16 | சென்னை தலைமை நிலைய பணிகள் |
| ஏப்ரல் 17 மாலை | வானூர் தொகுதி கோட்டக்குப்பத்தில் பொதுக்கூட்டம் |
| ஏப்ரல் 18 | பாபநாசம் |
| ஏப்ரல் 19 | கடையநல்லூர் பிரச்சாரம் |
| ஏப்ரல் 20 | வாணியம்பாடி |
| ஏப்ரல் 21 | சென்னை |

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## திராவிட இயக்க தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 04-4-2026 | சென்னை கிழக்கு | கொளத்தூர் |
| 05-4-2026 | சென்னை தென்மேற்கு | தி.நகர் |
| 07-4-2026 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு |
| 09-4-2026 | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |
| 11-4-2026 | கோவை வடக்கு | மேட்டுப்பாளையம் |
| 12-4-2026 | கோவை மாநகர் | கோயம்புத்தூர் தெற்கு |
| 13-4-2026 | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி |
| 14-4-2026 | திருநெல்வேலி மத்திய | பாளையங்கோட்டை |
| 15-4-2026 | தூத்துக்குடி வடக்கு | விளாத்திகுளம் |
| 17-4-2026 | சிவகங்கை | திருப்பத்தூர் |
| 18-4-2026 | புதுக்கோட்டை தெற்கு | திருமயம் |
| 19-4-2026 | தஞ்சாவூர் மத்திய | திருவையாறு |
| 20-4-2026 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் |

**“அண்ணா அறிவாலயம்”** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 06-04-2026 | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி |
| 08-04-2026 | திண்டுக்கல் மேற்கு | வேடசந்தூர் |
| 09–4–2026 | திருப்பூர் மத்திய | பல்லடம் |
| 10–04–2026 | கோவை தெற்கு | சூலூர் |
| 12-04-2026 | திருச்சிராப்பள்ளி வடக்கு | முசிறி |
| 14-04-2026 | தஞ்சாவூர் தெற்கு | பேராவூரணி |
| 18-04-2026 | சென்னை வடக்கு | பெரம்பூர் |
| 20-04-2026 | சேலம் | வீரபாண்டி |

**“அண்ணா அறிவாலயம்”** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## தேர்தல் பணிக்குழுச் செயலாளர் கம்பம் பெ .செல்வேந்திரன் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 08-4-2026 | வேலூர் வடக்கு | கீழ்வைத்தினன் குப்பம் |
| 09-4-2026 | திருவண்ணாமலை வடக்கு | வந்தவாசி |
| 12-4-2026 | கிருஷ்ணகிரி மேற்கு | ஓசூர் |
| 14-4-2026 | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| 15-4-2026 | ஈரோடு மத்திய | பவானி |
| 17-4-2026 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 19-4-2026 | விருதுநகர் தெற்கு | சாத்தூர் |
| 20-4-2026 | தேனி தெற்கு | கம்பம் |

**“அண்ணா அறிவாலயம்”** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 06-4-2026 | காஞ்சிபுரம் வடக்கு | தாம்பரம் |
| 07-4-2026 | திருவள்ளூர் மத்திய | ஆவடி |
| 09-4-2026 | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 10-4-2026 | சென்னை கிழக்கு | எழும்பூர் |
| 11-4-2026 | திருவள்ளூர் கிழக்கு | கும்மிடிப்பூண்டி |

**“அண்ணா அறிவாலயம்”** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 07-4-2026 | தூத்துக்குடி தெற்கு | ஒட்டப்பிடாரம் |
| 09-4-2026 | விருதுநகர் தெற்கு | ராஜபாளையம் |
| 10-4-2026 | தென்காசி வடக்கு | வாசுதேவநல்லூர் |
| 11-4-2026 | தென்காசி தெற்கு | கடையநல்லூர் |
| 12-4-2026 | தென்காசி தெற்கு | தென்காசி |
| 14-4-2026 | கரூர் | கிருஷ்ணராயபுரம் |
| 15-4-2026 | கரூர் | குளித்தலை |
| 16-4-2026 | கரூர் | அரவக்குறிச்சி |
| 18-4-2026 | திருச்சிராப்பள்ளி வடக்கு | மண்ணச்சநல்லூர் |
| 19-4-2026 | தஞ்சாவூர் மத்திய | தஞ்சாவூர் |

**“அண்ணா அறிவாலயம்”** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.